இந்த மொழிபெயர்க்கப்பட்ட திட்டத் தரவுத் தாள் (PDS) 22 ஏப்பிரல் 2016 திகதியிடப்பட்ட அதன் ஆங்கிலப் பதிப்பினை அடிப்படையாகக் கொண்டது.

ADB ASIAN DEVELOPMENT BANK

## இலங்கை: LOLC நிதி மற்றும் LOLC நுண் கடன்

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | LOLC நிதி மற்றும் LOLC நுண் கடன் |
| திட்ட இலக்கம் | 49188-001 |
| கடன் வழங்குபவர்/ நிறுவனம் | LOLC நிதி<br>LOLC நுண் கடன் |
| நாடு | இலங்கை |
| அமைவிடம் | |
| ஒப்புதல் இலக்கம் | 7458/3323, 7457/3324, |
| வகை அல்லது உதவி நடைமுறை | 7458/3323 கடன் அமெரிக்க டொலர் $30.00 மில்லியன் ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| மூலோபாய செயற்பட்டியல் | உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி |
| மாற்றத்திற்கான இயக்கிகள் | பாலின சமத்துவம் மற்றும் பெருவோட்டத்தில் இணைதல்<br>ஆளுகை மற்றும் திறன் மேம்பாடு<br>அறிவுசார் தீர்வுகள்<br>கூட்டாண்மைகள்<br>தனியர்த்துறை அபிவிருத்தி |
| துறை / உபதுறை | **நிதி** – சிறிய மற்றும் நடுத்தர நிறுவன நிதி மற்றும் குத்தகை |
| பாலின சமத்துவம் மற்றும் பெருவோட்டத்தில் இணைதல் | செயலூக்கமான பாலின பெருவோட்ட இணைவு |
| பொறுப்பான ஆசிய அபிவிருத்தி வங்கித் திணைக்களம் | தனியார்த்துறைச் செயற்பாடுகள் திணைக்களம் |
| பொறுப்பான ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரிவு | துறை முகாமைத்துவப் பிரிவு, தனியார்த் துறை செயற்படுத்தல்கள் திணைக்களம் |
| பொறுப்பான ஆசிய அபிவிருத்தி வங்கி அலுவலர் | மோனிஷா ஹெர்மன்ஸ் |
| திட்ட அநுசரணையாளர்(கள்) | |

| | |
|---|---|
| விவரணம் | அண்ணளவாக 59% இலங்கையர்களுக்கு கடனுக்கான அணுகல் இல்லை. நுண், சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான (MSME) நிதிக்கான அணுகலை மேம்படுத்துவது மற்றும் இலங்கையின் குத்தகைத் துறையினைப் பலப்படுத்துவதற்கும், (i) LOLC மைக்ரோ கிரெடிட் லிமிடெட் (LOMC) இற்கு $25 மில்லியன் வரையிலான ஒரு சிரேஷ்ட கடன் மற்றும் (ii) லங்கா ஒறிக்ஸ் நிதி நிறுவனம் தனியார் வரையறுக்கப்பட்ட கம்பனிக்கு (LOFC) $30 மில்லியன் வரையிலான ஒரு சிரேஷ்ட கடன் என்பவற்றை உள்ளடக்கிய ஒரு திட்டம் உத்தேசிக்கப்படுகின்றது. LOMC மற்றும் LOFC என்பன நன்கு அறியப்பட்ட, லங்கா ஒறிக்ஸ் நிதி நிறுவனத்தின் (தனியார் வரையறுக்கப்பட்ட கம்பனி) துணை அமைப்புக்களாக இருக்கின்ற, $1.65 பில்லியனுக்கும் அதிகாமான சொத்துக்களுடன் பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட விரிவுபடுத்தப்பட்ட கம்பனிகளாகும். இந்தக் கடன்கள் நிதிக்கான அதிக அணுகலை ஊக்குவிக்க போதிய அளவு சேவை வழங்கப்படாத புவியியல் பிரதேசங்களையும் இலக்காகக் கொள்ளும். |
| குறிக்கோள்கள் மற்றும் செயலெல்லை | நீண்ட கால நிதிக் கிடைப்பனவை மட்டுப்படுத்துகின்ற நாடடின் மிகவும் அபிவிருத்தி அடைந்த மூலதன சந்தை இன்மை உள்ளடங்கலாக நாட்டின் குறைந்த மட்டத்தில் விருத்தியடைந்துள்ள நிதித்துறையால் நிதி அணுகல் இறுக்கமாக்கப்பட்டுள்ள MSMEக்களுக்கு, குறிப்பாக NBFIகளுக்கு மிகவும் தேவையான நீண்டகால நிதி வசதிகளை இக்கடன் வழங்கும். ஏடிபி நிதியிடலானது நீண்டகால குத்தகைப்பொருட்களுக்கு உதவுவதுடன், குறுகியகால நுன் கடன்களின் மீழ்சுழற்சியையும் அனுமதிக்கும். |
| நாட்டு/ பிராந்திய மூலோபாயத்திற்கான இணைப்பு | மூலோபாயம் 2020 இனது இடைக்கால மீளாய்வின் கீழ், நிதிசார் உட்கட்டமைப்பு, நிறுவனங்கள், பொருட்கள் மற்றும் சேவைகளின் வளர்ச்சியை ஆதரிப்பதன் மூலமும் உள்ளடக்கிய வளர்ச்சியை மேம்படுத்துவதன் ஊடாகவும் ஆசிய அபிவிருத்தி வங்கி நிதித் துறைக்கான ஆதரவினை வலுப்படுத்துவதனை இலக்காகக் கொண்டிருக்கின்றது. அத்தகைய முன்னெடுப்புகளின் ஊடாக, ஆசிய அபிவிருத்தி வங்கி (i) பிராந்தியத்தின் சேமிப்புக்களை பயனுள்ள முதலீடுகளிற்கு திருப்பிவிட உதவுதல் மற்றும் (ii) சர்வதேச சிறந்த நடைமுறைகளை அறிமுகப்படுத்தி நிதி நிறுவனங்களின் திறனைக் கட்டியெழுப்புதலைத் தொடரும். உத்தேச முதலீடு நகரம் மற்றும் கிராமப்புறங்களில் கடன் அடிப்படையில் நுண், சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு நிதி ஏற்பாடுகள் வழங்குவதன் மூலமும் நிதித் துறையை ஆழமாக்குவதன் ஊடாகவும் நிறுவன மற்றும் நிதித் துறை மேம்பாட்டிற்கு உதவியளிக்கின்றது. நிதிசார் மேம்பாட்டிற்கு தொழில்நுட்ப உதவி ஊடாகவும் ஆதரவளிக்கப்படும், அது வங்கியின் கடன் வழங்கும் திறனை (அடிக்குறிப்பு 32) பலப்படுத்தும். இத் திட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பாலின சமத்துவம் மற்றும் மகளிர் மேம்பாட்டு செயல்பாட்டுத் திட்டம் 2013-2020 உடன் கூட ஒருங்கமைகின்றது. |

**பாதுகாப்பு வகைகள்**

| | |
|---|---|
| சுற்றுச்சூழல் | FI |
| தன்னிச்சையற்ற மீள்குடியேற்றம் | FI |
| சுதேச மக்கள் | FI |

**சுற்றுச்சூழல் மற்றும் சமுதாயம் சார்ந்த பார்வைகளின் சுருக்கம்**

| | |
|---|---|
| சுற்றுச்சூழல்சார்ந்த பார்வைகள் | இந்த முதலீடு சுற்றுச்சூழல் தொடர்பான தாக்கங்களுக்கு C ஆக கருதப்பட்டு வகை F1 ஆக வகைப்படுத்தப்பட்டுள்ளது. |
| தன்னிச்சையற்ற மீள்குடியேற்றம் | இந்த முதலீடு தன்னிச்சையற்ற மீள்குடியேற்றம் தொடர்பான தாக்கங்களுக்கு C ஆக கருதப்பட்டு வகை F1 ஆக வகைப்படுத்தப்பட்டுள்ளது. |
| சுதேச மக்கள் | இந்த முதலீடு சுதேச மக்கள் தொடர்பான தாக்கங்களுக்கு C ஆக கருதப்பட்டு வகை F1 ஆக வகைப்படுத்தப்பட்டுள்ளது. |
| தொடர்பாடல், பங்கேற்பு, மற்றும் ஆலோசனை | நிதியாதார இடைத்தரகர்கள் தேசிய தொழிலாளர் சட்டங்கள் மற்றும், ஆசிய அபிவிருத்தி வங்கியின் சமூகப் பாதுகாப்பு மூலோபாயம் (2001) இனை அனுசரித்து, சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட அடிப்படைத் தொழிலாளர் தரங்களுக்கு இணங்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். LOLC மற்றும் LOMC (i) அத்தகைய சட்டங்களுடன் அவர்களின் இணக்கம் மற்றும் (ii) எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு கிரமமாகத் தெரிவிக்கும். பாதிக்கப்பட்ட மக்களுடனான தகவல் வெளிப்படுத்தல் மற்றும் ஆலோசனைகள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தேவைகளுக்கு ஏற்ப நடாத்தப்படும். திட்டத்தின் பயனுள்ள பாலினப் பெருவோட்ட வகைக்கு ஆதரவாக செயல்திறம் சார்ந்த பாலின அம்சங்கள் திட்ட வடிவமைப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. |

**வடிவமைப்பு உதவி, செயல்முறை மற்றும் செயற்படுத்தற் கால அட்டவணை**

| | |
|---|---|
| எண்ணக்கரு அனுமதி | 30 ஜூன் 2015 |
| உரிய விடாமுயற்சி | |
| கடன் குழுக் கூட்டம் | 28 செப்தெம்பர் 2015 |
| ஒப்புதல் | 19 நவம்பர் 2015 |
| கடந்த திட்டத் தகவல் தாள் (PDS) புதுப்பிப்பு | 01 ஏப்பிரல் 2016 |

திட்டத் தரவுத் தாள்கள் (PDS) திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டத்தின் சுருக்கமான தகவலைக் கொண்டிருக்கின்றன: ஏனெனில், PDS ஆனது ஒரு செயல்நிலையிலுள்ள வேலையாக இருப்பதனால், சில தகவல் இதன் முதற் பதிப்பில் உள்ளடக்கப்படாதிருக்கலாம் ஆனால் அவை கிடைக்கும் போது சேர்க்கப்படும். முன்மொழியப்பட்ட திட்டங்கள் பற்றிய தகவல் தற்காலிகமானதாகவும் குறிப்பானதாகவும் உள்ளது.

ADB ஏடிபி இந்தத் தகவல் தரவுத் தாளில் உள்ளடக்கப்பட்டிருக்கும் தகவலை அதன் பயனர்களுக்கு எந்த விதமான உத்தரவாதமும் இல்லாமல் ஒரு வளமாக மட்டும் வழங்குகின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கி உயர் தரமான உள்ளடக்கத்தினை வழங்க முயற்சிக்கும் அதே நேரத்தில், வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ வியாபார உத்தரவாத வரையறைகள் இல்லாமை உட்பட, எந்த வகையான உத்தரவாதமும் இல்லாமல் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்குப் பொருந்துமாறு உள்ளபடி வழங்குகின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கி குறிப்பாக, அவ்வாறான எந்தத் தகவலினதும் துல்லியம் மற்றும் பூரணத்துவம் பற்றி எந்தவித உத்தரவாதங்களையோ அல்லது பிரதிநிதிதுவங்களையோ மேற்கொள்ளவில்லை.